# 18.07.2019

மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சியின் மொத்த மக்கள்த்தொகை 26,823 ஆகும். மொத்த பரப்பளவு 2.68 ச.கி.மீ., மொத்த வீடுகளின் எண்ணிக்கை 7982 ஆகும். இந்நகராட்சி 1960 ஆம் ஆண்டு முதல் நகராட்சியாக இருந்து வந்தது. கேரள அரசிடமிருந்து பிரிந்த்து முதல் 2 ஆம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் 26.355 கி.மீ. சாலைகள், 24.50 கி.மீ. மழை நீர் வடிகால் உள்ளன. 146 தெருக்கள் உள்ளன. தினசரி சேகரமாகும் குப்பைகள் 8.04 மெட்டிரிக் டன் ஆகும். இந்நகராட்சியில் தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் 20 நபர்கள் நிரந்தர பணியாளர்கள் ஆவர். நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடத்தில் 57ல் நாளது தேதி வரை காலியாக உள்ள பணியிடம் 37 ஆகும்.

திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2000ன் படி திடக்கழிவுகள் முறையாக கையாளுதல் விதிகளின்படி வீடு வீடாக குப்பைகளை சேகரித்து முறையாக கையாளுதல் மற்றும் கலவை உரமாக்குதல் மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படுத்துதல் பணியினை மேற்கொள்ளவும் வாறுகால் துப்புரவு பணி மேற்கொள்ளவும் கீழ்க்கண்ட விபரப்படி பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

1. வீடு வீடாக கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து சேகரித்தல்.
2. மேற்படி வார்டு பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவ கழிவு அல்லாத பிற கழிவுகளை பிரித்து சேகரித்தல்.
3. வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள், வர்த்தக நிறுவனங்கள், வாரச்சந்தை சமுதாயக் கூடங்கள் இன்னும் பிற நிறுவனங்களில் சேகரமாகும் கழிவுகளை பிரித்து சேகரித்தல்.
4. பிரித்து சேகரிக்கப்பட்ட கழிவுகளை அன்றே கல்வை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்வது.
5. வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து சாலைகளையும் பெருக்கி சுத்தல் செய்தல்.
6. கழிவு நீர் ஒடைகளை சுத்தம் செய்து சீராக கழிவு நீர் ஒடச் செய்து வாறுகால் கழிவுகளை அன்றே கலவை உரக்கிடங்கில் சேர்ப்பது.
7. தேவையான இடங்களில் கிருமி நாசினிகள் தெளித்தல்.

8. பேருந்து நிலையம் பராமரித்தல்.

எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சீரிய முறையில் மேற்கொள்வதற்கு அரசாணை நிலை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.04.1997-ன் படி இந்நகராட்சிக்கு அளவுகோலின்படி 116 பணியாளர்கள் தேவை உள்ளது ஆனால் 20 பணியாளர்கள் மட்டுமே இந்நகராட்சியில் பணியில் உள்ளனர். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 36909-7/பி3/2015, நாள். 18.12.2015-ன்படி அனுமதி வழங்கப்பட்டதன்கீழ் 01.11.2016 முதல் 31.10.2019 வரை மூன்றாண்டுகாலத்திற்கு 68 பணியாளர்கள் தனியார் ஒப்பந்தக்காரர் மூலமாக மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. மேற்படி ஒப்பந்தக்காலம் 31.10.2019-ல் முடிவடைவதால் வளர்ந்து வரும் செங்கோட்டை நகராட்சியில் சுகாதார நலனை முன்னிட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி பார்வை 6 ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் உத்தரவில் அனுமதி வழங்கப்பட்ட 26 பணியாளர்கள் நீங்கலாக மீதமுள்ள 70 துப்புரவு பணியாளர்களுக்கு, முன் அனுபவம் வாய்ந்த தனியார் ஒப்பந்தக்காரர்கள் மூலமாக புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்க்கண்ட அளவுகோலின்படி செயல்படுத்த அனுமதி வேண்டுப்படுகிறது.

நகராட்சி மற்றும் திடக்கழிவு மேலாண்மை சம்பந்தமாக பொது விபரங்கள்

| | | |
|---|---|---|
| நகரின் பரப்பளவு | : | 2.68 சதுர கிலோ மீட்டர் |
| நகரின் மொத்த மக்கள் தொகை | : | 26823 |
| மொத்த குடியிருப்புகள் | | 7982 |
| மொத்த வணிக கட்டிடங்கள் | | 1261 |
| தெருக்களின் நீளம் | | 26.405 கி.மீ |
| வடிகால்களின் நீளம் | | 47.524 கி.மீ |
| பேருந்து நிலையம் | | 1 |
| வாரச்சந்தை | | 1 |
| ஆடறுப்பு மனை | | 1 |
| அரசு மருத்துவமனை | | 1 |
| தனியார் சமுதாய கூடங்கள் | | 5 |
| பொது/கட்டண கழிப்பிடங்கள் | | 11 |
| (அலோபதி-1, ஆயுர்வேதம்-1) | | |
| தனியார் மருத்துவமனை | | 5 |
| திருமண மண்டபங்கள் (நகராட்சி) | | 1 |
| மயானங்கள் | | 2 |

| | | |
|---|---|---|
| கலவை உரக்கிடங்கு | | 1 |
| 1.இலத்தூர் ரோடு | | 3.10 ஏக்கர் |
| வாகன விவரங்கள் | | |
| மினி லாரி | | 2 |
| BOV | | 13 |
| தள்ளுவண்டிகள் | | 34 |
| பொது சுகாதார பிரிவு பணியிட விவரங்கள் | | |
| துப்புரவு அலுவலர் | | 1 |
| துப்புரவு ஆய்வாளர் | | 1 |
| துப்புரவுபணி மேற்பார்வையாளர் | | 3 |
| துப்புரவு பணியாளர்கள் மொத்த பணியிடம் | | 57 |
| துப்புரவு பணியாளர்கள் மொத்த காலியிடம் | | 37 |
| தற்போதைய பணியிடம் | | 20 |
| தினசரி சேகரிக்கப்படும் கழிவுகள் விவரம் | | |
| குடியிருப்பு பகுதிகள் | | 6.60 மெட்ரிக் டன் |
| வடிகால் சுத்தம் செய்ததன் மூலம் | | 0 மெட்ரிக் டன் |
| உணவகம்/திருமண மண்டபம்/வணிகதலங்கள் | | 1.44 மெட்ரிக் டன் |
| மொத்தம் | | 8.04 மெட்ரிக் டன் |
| அரசாணை (நிலை) எண் 101 நாள். 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | | |
| அ.250 குடியிருப்புகள் கொண்ட பகுதிக்கு மூன்று பேர் கொண்ட குழு 7982/250 x 3 | | 32 x 3 =96 |
| ஆ)சிறிய லாரி ஒன்றுக்கு 3 பேர் வீதம் 2 x 3 | | 6 |
| இ) டிப்பர் லாரி வாகனத்திற்கு /ஆட்டோ வாகனத்திற்கு நபர் வீதம் ஆட்டோ 4க்கு | | 4 |
| உரக்கிடங்கு பராமரிக்க MCC 3 மையம் | | 9 |
| பேரூந்து நிலையம் சுத்தம் செய்ய | | 1 |
| வாறுகால் சுத்தம் செய்திட | | |
| மொத்தம் | | 116 |

1. வீடு வீடாக கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து சேகரித்தல்.
2. மேற்படி வார்டு பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவ கழிவு அல்லாத பிற கழிவுகளை பிரித்து சேகரித்தல்.
3. வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள், வர்த்தக நிறுவனங்கள், வாரச்சந்தை சமுதாயக் கூடங்கள் இன்னும் பிற நிறுவனங்களில் சேகரமாகும் கழிவுகளை பிரித்து சேகரித்தல்.
4. பிரித்து சேகரிக்கப்பட்ட கழிவுகளை அன்றே நுண்ணிய உரக்குடில்களுக்கு எடுத்துச் செல்வது.

5. வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து சாலைகளையும் பெருக்கி சுத்தல் செய்தல்.
6. கழிவு நீர் ஒடைகளை சுத்தம் செய்து சீராக கழிவு நீர் ஒடச் செய்து வாறுகால் கழிவுகளை அன்றே கலவை உரக்கிடங்கில் சேர்ப்பது.
7. தேவையான இடங்களில் கிருமி நாசினிகள் தெளித்தல்.

1 - 24 வரையிலுள்ள வார்டுகளின் மக்கள் தொகை - 26823

1 - 24 வரையுள்ள வார்டுகளின் வீடுகள் - 7982

சேகரமாகும் திடக்கழிவுகள் அளவு தனி நபர் ஒன்றுக்கு - 300 கிராம் x 26823 =8.04 M.T

I. அரசு ஆணையின் படி தேவைப்படும் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநருக்கு மாத ஊதியம்

| பணியாளர்கள் தேவை | இருப்பு | மீதம் தேவையான பணியாளர்கள் |
|---|---|---|
| 116 | 20 | 96 |

2. நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி தேவைப்படும் பணியாளர்கள் விபரம்.

| வ.எண் | விவரம் | | திடக்கழிவு மேலாண்மை திட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | தள்ளுவண்டிகள் மூலமாக கழிவுகள் தயாரிக்க | | 55 |
| 2 | டம்பர் பிளேசர் வாகனம் | | 2 |
| 3 | மினிலாரி | | 6 |
| 4 | ஆட்டோ 11-க்கு | | 11 |
| 5 | ஓட்டுநர் | | 7 |
| 6 | உரம் தயாரிக்க | மைக்ரோ காம்போஸ்டிங் சென்டர் 3 எண்ணம் | 15 |
| 7 | உரம் தரம் பிரித்தல் | | |
| 8 | உரம் சலித்தல் | | |
| 9 | தெரு சுத்தம் மற்றும் வாறுகால் சுத்தம் செய்பவர் | | 20 |
| | மொத்தம் | | 116 |

சுருக்கம்.

| திடக்கழிவு மேலாண்மை திட்ட | தற்போது நகராட்சியில் பணியில் உள்ள | கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களி | ந.நி.ஆ., சென்னை அவர்களின் செயல் முறை ஆணை | மீதம் தேவைப் படும் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| வழிகாட்டுதல் பிரகாரம் தேவைப்படும் பணியாளர்கள் | பணியாளர்களின் விவரம் | ன் (தனியார் மயம் மூலமாக) | K.Dis.28369/03/2018, நாள். 04.12.2018 உத்திரவின் கீழ் | பணியாளர்கள் |
| 116 | 20 | 96 | 26 | 70 |

3) ஊதியம் செலவின விவரம்

தற்போதைய அனைத்து துறை பணியாளர்களின் ஊதியம்
(ஆண்டு ஒன்றுக்கு) ரூ. 359.06
மொத்த வருமானம் ரூ. 455.16
மொத்த வருவாயில் ஊதியம் செலவினம் 77.56%

4) தனியார் மயம் ஆக்குவதனால் மேற்கொள்ளப்படும் செலவினம் ஒரு கண்ணோட்டம்

1) 70 நபர்கள் நியமனம் செய்வதனால் ஏற்படும் ஆண்டு செலவினம் ரூ. 147.70 லட்சம் (Pay matrixLevel 15,700)

2) திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி தனியார் மயம் மூலமாக பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆண்டு செலவினம்

70 நபர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 421/- வீதம் ரூ. 107.50 லட்சம்

5 தனியார் மயம் ஆக்கப்படுவதன் அவசியம் மற்றும் நகராட்சியின் நிதி மேம்பாடு அடைவதன் நோக்கம் ஒரு கண்ணோட்டம் (As per MSWM Guideline)

| 70 பணியாளர்கள் நகராட்சியின் மூலமாக நியமனம் செய்து அதனால் ஏற்படும் செலவினம் | 70 பணியாளர்கள் தனியார் மயம் மூலமாக நியமனம் செய்வதால் ஏற்படும் செலவினம் | தனியார் மயமாக்குதலால் ஆண்டு ஒன்றுக்கு நகராட்சிக்கு ஏற்படும் நிதி சேமிப்பு |
|---|---|---|
| 147.70 | 107.50 | 40.20 |

எனவே, நகராட்சி நிதிநிலை கருத்திற்கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியினை தனியார் மயம் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டியது மிகவும் அத்தியாவசியமாகின்றது. எனவே, திடக்கழிவு மேலாண்மை பணியினை தனியார் மயம் மூலமாக மேற்கண்ட விவரப்படி பராமரிப்பினை மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும், மேலும் அதற்கு உரிய செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1.மேற்படி தனியார் மூலமாக திடக்கழிவு மேலாண்மை துப்புரவு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. மேற்படி பணிகளுக்கு உரிய செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 160

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் கொள்முதல் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண். 152 நாள். 19.06.2019ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 15.07.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல்

| வ. எண். | கிருமி நாசினி | தேவைப்படும் அளவு | இ.சரவணக்குமார் எஸ்.ஆர்.கே.தெரு, செங்கோட்டை | அரீஸ் கெமிக்கல்ஸ், (தங்கவேலு) காமாட்சி தெரு, செங்கோட்டை |
|---|---|---|---|---|
| 1 | நீர்த்திய சுண்ணாம்புத் தூள் | 10000 கிலோ | ரூ.20/- | ரூ.15/- |
| 2 | பிளீச்சிங் பவுடர் | 2000 கிலோ | ரூ.65/- | ரூ.59/- |
| 3 | பீனாயில் | 500 லிட்டர் | ரூ.70/- | ரூ.60/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள அரீஸ் கெமிக்கல்ஸ் (திரு.தங்கவேலு, செங்கோட்டை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. குறைந்தபட்ச விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய அரீஸ் கெமிக்கல்ஸ் (திரு.தங்கவேலு, செங்கோட்டை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 161

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.

மன்றப்பொருள்..3

நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்டுள்ள 51 வணிக்க் கடைகளுக்கும் (அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007-ன் படி) தற்போதைய அங்காடி மதிப்பில் 2016-17 முதல் வாடகை நிர்ணயம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண். 314 நாள். 25.01.2016ல் அனுமதித்துள்ளது. தற்போது அங்காடி மதிப்பில் மாதவாடகை குத்தகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு குத்தகைதாரர்களிடம் சம்மதக்கடிதம் பெறப்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதி நடைமுறையில் இருந்ததால் திருத்திய குத்தகை உரிமத்தை நிர்ணயம் செய்ததற்கும் 01.04.2019 முதல் 31.03.2022 வரை இரண்டாவது முறையாக மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து குத்தகை உரிமம் வழங்கியதற்கும் மன்றத்தின் பின்னேற்பும், ஒப்புதலும் வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | வரிவிதிப் பு எண் | குத்தகைதாரர் பெயர் | கடையின் அளவு | தற்போதுள் ள வாடகை | திருத்திய அங்காடி மதிப்பில் நிர்ணயிக்கப்படும் வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 544 | என்.கனியத்தா<br>பேரூந்து நிலைய உட்பக்கம் கடை | 10 x 4 | 811 | 933 |
| 2 | 548 | P.V.நடராஜன்,<br>பேருந்து நிலைய அசைவ விடுதி | 32 x12=384 | 3862 | 4800 |
| 3 | 549 | முருகையா<br>பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண்.1 | 10 x9=90 | 1725 | 1984 |
| 4 | 550 | S.P.சுப்பையா<br>பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண். 2 | 10 x10=100 | 966 | 1250 |
| 5 | 553 | செயலாளர், சங்கரன் கோவில் சர்வோதையா சங்கம் பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண். 49D | 15 x7=105 | 1622 | 1865 |
| 6 | 554 | டி.சுப்பையா பிள்ளை<br>பேருந்து நிலைய வெளிப்புறக்கடை எண். 49E | 15 x7=105 | 2116 | 2222 |
| 7 | 556 | P.V.நடராஜன்,<br>பேருந்து நிலைய வெளிப்புறக்கடை எண். 49G | 15 x7=105 | 1685 | 1938 |
| 8 | 557 | விவேகானந்தன்<br>பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண். 49H | 7 x9=63 | 966 | 1063 |
| 9 | 558 | செல்வராஜ்<br>பேருந்த நிலைய வெளிப்புறக் கடை எண். 49J | 35 x9=315 | 1984 | 3938 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | 561 | செயலாளர், சங்கரன்கோவில் சர்வோதய சங்கம் பேருந்து நிலைய வெளிப்புறக்கடை எண் 49M | 7 x9=63 | 966 | 1111 |
| 11 | 562 | மேலாளர் TNSETC முன்பதிவு அலுவலகம், பேருந்து நிலைய வெளிப்புறக்கடை எண். 49N | 7 x9=63 | 344 | 788 |
| 12 | 564 | மதியழகன், பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண். 49 Q | 7 x9=63 | 966 | 1111 |
| 13 | 567 | சரவணமுத்தையா, பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண்.49 T | 13 x7=91 | 807 | 1138 |
| 14 | 568 | P.செல்லத்துரை, பேருந்துநிலைய வெளிப்புறக்கடை எண். 49U | 13 x7=91 | 966 | 1138 |
| 15 | 569 | P.செல்லத்துரை, பேருந்துநிலைய வெளிப்புறக்கடை எண். 49 V | 13 x7=91 | 966 | 1138 |
| 16 | 595 | L. ஆறுமுகம், பேருந்து நிலைய வெளிப்புறக்கடை எண். 49 F | 15 x7=105 | 2315 | 2431 |
| 17 | 609 | செய்யது சுலைமான் பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண். 3 | 8 x8=64 | 995 | 1144 |
| 18 | 611 | S.பாலகிருஷ்ணன், பேருந்துநிலைய வெளிப்புறக்கடை எண்.49 R | 7 x9=63 | 863 | 992 |
| 19 | 513 | செய்யது சுலைமான் பேருந்து நிலைய வெளிப்புறக் கடை எண். 5 | 7 x8=56 | 874 | 1005 |
| 20 | 514 | இ.தட்சிணா மூர்த்தி தினசரி சந்தை உட்புறக்கடை எண்.6 | 7 x8=56 | 874 | 1005 |
| 21 | 515 | இ.பாலசுப்பிரமணியன் தினசரி சந்தை உட்புறக்கடை எண். 7 | 7 x8=56 | 874 | 1005 |
| 22 | 516 | பி.செல்லத்துரை தினசரி சந்தை உட்புறக் கடை எண். 8 | 9 x6=54 | 874 | 1005 |
| 23 | 517 | பி.செல்லத்துரை தினசரி சந்தை உட்புறக்கடை எண். 9 | 9 x6=54 | 874 | 1005 |
| 24 | 518 | செல்லத்துரை தினசரி சந்தை உட்புறக்கடை எண். 10 | 9 x6=54 | 874 | 1005 |
| 25 | 519 | இசக்கிமுத்து தினசரி சந்தை உட்புறக்கடை எண். 11 | 9 x6=54 | 874 | 1005 |
| 26 | 520 | இசக்கிமுத்து தினசரி சந்தை உட்புறக்கடை எண். 12 | 9 x6=54 | 874 | 1005 |
| 27 | 521 | அய்யப்பன் தினசரி சந்தை வெளிப்புறக் கடை எண்.1 | 10 x8=80 | 887 | 1020 |
| 28 | 522 | மணிகண்டன் தினசரி சந்தை வெளிப்புறக்கடை எண்.2 | 10 x8=80 | 874 | 1005 |
| 29 | 523 | பி.செல்லத்துரை தினசரி சந்தை வெளிப்புறக் கடை | 10 x8=80 | 874 | 1005 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | எண்.3 | | | |
| 30 | 524 | S.P.அய்யப்பன்<br>தினசரி சந்தை வெளிப்புறக் கடை எண்.4 | 10 x8=80 | 874 | 1005 |
| 31 | 525 | நிர்மல்குமார்<br>தினசரி சந்தை வெளிப்புறக் கடை எண்.5 | 10 x8=80 | 899 | 1034 |
| 32 | 526 | பி.அழகையா<br>தினசரி சந்தை வெளிப்புறக் கடை எண்.6 | 10 x8=80 | 874 | 1005 |
| 33 | 529 | முகமது பண்ணையார்<br>தினசரி சந்தை வெளிப்புறக் கடை எண். 9 | 10 x8=80 | 874 | 1005 |
| 34 | 530 | சுப்பையா பிள்ளை<br>தினசரி சந்தை வெளிப்புறக் கடை எண். 10 | 10 x12=120 | 874 | 1005 |
| 35 | 531 | பொன்னுச்சீனி<br>தினசரி சந்தை வெளிப்புறக்கடை எண். 11 | 20 x9=180 | 874 | 1260 |
| 36 | 502 | பி.வி.நடராஜன்<br>வாரச்சந்தை கடை எண்.1 | 10 x10=100 | 969 | 1114 |
| 37 | 503 | ஹரிஹரசுப்பிரமணியன்<br>வாரச்சந்தை கடை எண் 2 | 10 x10=100 | 610 | 1000 |
| 38 | 504 | D.ராஜ்<br>வாரச்சந்தை கடை எண். 3 | 10 x10=100 | 1087 | 1250 |
| 39 | 505 | குமாரசாமி<br>வாரச்சந்தை கடை எண். 4 | 10 x10=100 | 748 | 1000 |
| 40 | 506 | அருமை நாயகம்<br>வாரச்சந்தை கடை எண். 5 | 10 x10=100 | 730 | 1000 |
| 41 | 507 | ஞானததுரை<br>வாரச்சந்தை கடை எண்.6 | 10 x10=100 | 730 | 1000 |
| 42 | 508 | பி.வி.நடராஜன்<br>வாரச்சந்தை கடை எண். 7 | 10 x10=100 | 443 | 1000 |
| 43 | 509 | பி.வி.நடராஜன்<br>வாரச்சந்தை கடை எண். 8 | 10 x10=100 | 443 | 1000 |
| 44 | 510 | பி.வி.நடராஜன்<br>வாரச்சந்தை கடை எண். 9 | 10 x10=100 | 443 | 1000 |
| 45 | 511 | பி.கணேசன்<br>வாரச்சந்தை கடை எண். 10 | 10 x10=100 | 443 | 1000 |
| 46 | 577 | தென்றல் பெண்கள் குழு நடத்தும் பெட்டிக்கடை | 6 x6=36 | 173 | 360 |
| 47 | 537 | கஸ்தூரிபாய் பெண்கள் குழு நடத்தும் பெட்டிக்கடை | 6 x6=36 | 173 | 360 |
| 48 | 610 | பி.உதயசங்கர்<br>பேருந்து நிலைய உட்பக்கம் கடை | 8 x8=64 | 1521 | 1749 |
| 49 | 12132 | கே.இசக்கிராஜன்<br>பேருந்து நிலைய வெளிப்புறக்கடை | 7x9=63 | 805 | 926 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | எண். 49P | | | |
| 50 | 10115 | பாலசுப்பிரமணியன்<br>பேருந்து நிலைய வெளிப்புறக்கடை<br>எண் 49K | 7 x9=63 | 863 | 992 |
| 51 | 121310 | பிச்சுராஜ்<br>பேருந்து நிலைய சைவ சிற்றுண்டி | 20 x15=300 | 4658 | 5357 |

அலுவலகக்குறிப்பு..

நாடாளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதி நடைமுறையில் இருந்த காரணத்தால் மேற்படி குத்தகை இனங்களை புதுப்பித்தல் செய்ததற்கு பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண். 162

அனுமதி வழங்கப்பட்டது

மன்றப்பொருள்..4

இந்நகராட்சி அலுவலகத்தில் கணக்கு பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவில் உள்ள மானிட்டர் பழுதாகி உள்ளதை பழுது நீக்க இயலாத காரணத்தால் புதிதாக இரண்டு மானிட்டரும், அலுவலகத்தில் அனைத்து நடவடிக்கைகளும் கணினியில் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் கூடுதலாக பொது பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் சுகாதார பிரிவு தலா ஒவ்வொரு கணினியும், கணினி வசூல் மையத்திற்கு 80 கலம் டாட் மேட்ரிக் பிரிண்டர் ஒன்றும் தேவைப்படுவதால் புதிதாக 3 எண்ணம் கணினி மற்றும் 80 கலம் டாட் மேட்ரிக் பிரிண்டர் ஒன்றும் கொள்முதல் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. கணினி, பிரிண்டர் மற்றும் மானிட்டர் கொள்முதல் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 162

அனுமதி வழங்கப்படுகிறது.

மன்றப்பொருள்..5

இந்நகராட்சி கணினி பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டும் 5 KVA UPS Front Line System & Service (P) Limited நிறுவனத்திடம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அலுவலகம் வாயிலாக 2014 ஆம் ஆண்டு இந்நகராட்சியில் நிறுவப்பட்டது. மேற்படி 5 KVA UPS 17.05.2019 அன்று ஏற்பட்ட மின்னலில் பழுதடைந்து விட்டது. தற்போது மேற்படி UPS க்கு பழுது நீக்க உத்திரவாதம் காலம் முடிவடைந்து விட்டதால் வெளி நிறுவனம் மூலம் பழுது நீக்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 15,000/-க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும், அலுவலகத்தில் அனைத்து நிர்வாக பணிகளும் கணினி மூலம் நடைபெற்று வருவதால் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதற்கும், வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியலில்

| வ. எண் | பணியின் விவரம் | காசி பவர் சிஸ்டம் & சர்வீஸஸ், சென்னை | புரோடான் டெக்னாலஜிஸ், சென்னை | பிரண்ட்லைன் சிஸ்டம் & சர்வீஸஸ், சென்னை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்தில் உள்ள 5 KVA திறன் கொண்ட UPS பழுது நீக்கம் செய்தல் | ரூ. 13750 + 18% GST | ரூ. 13600 + 18% GST | ரூ. 12000/- |

குறைந்த பட்ச விலைவிகிதமாக ரூ. 12000/-க்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள பிரண்ட்லைன் சிஸ்டம் & சர்வீஸஸ், சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண். 164

அங்கீகரிக்கப்பட்டது.

மன்றப்பொருள்..6

இந்நகராட்சி கணினி பிரிவில் 5 KVA UPS மற்றும் 3 KVA UPS என இரண்டு UPS உள்ளது. மேற்படி 3 KVA UPS ஆனது 6 பேட்டரியுடன் 2010 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு, தற்போது பேட்டரி மட்டும் பழுதாகி உள்ளது. 5 KVA UPS 12

பேட்டரியுடன் 2014 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு, தற்போது 30 நிமிடத்திற்கு குறைவாக தான் (Backup)பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளது. எனவே, 3 KVA UPS-க்கு 6 பேட்டரியும், 5 KVA UPS-க்கு 12 பேட்டரியும் (பழைய பேட்டரியை கொடுத்து விட்டு) புதிதாக வாங்கி பொருத்தவும், மேற்படி பேட்டரிகள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ. 1.20 இலட்சத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண். 165

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..7

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள டம்பர் பிளேசர் வாகனம் எண். TN 76 P 8356 க்குரிய தகுதிச்சான்று 06.08.2019 அன்றுடன் முடிவடைவதால், தகுதிச் சான்று பெறுவதற்கான பழுது பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.48,000/-க்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 166

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..8

511 செங்கோட்டை நகராட்சி 2019-2022(மூன்றாண்டுகள்) ஆண்டு வரையி577லான காலத்திற்கு குத்தகை இனங்களின் அனுபவ உரிமத்திற்குரிய ஏலம் மற்றும் 537ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு தினசரி நாளிதழிலில் விளம்பரம் வெளியிட்டத610ற்கும், மேற்படி விளம்பரம் தினபூமி நாளிதழில் 2

ஜூன் 2019 அன்று  வெளியிட்டு அதற்குரிய பட்டியல்படி ரூ. 23688/- மேற்படி நிறுவனத்திற்கு வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினம் ரூ. 23688/- நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண். 3090/2015/வ.ஆ)

தீர்மானம் எண். 167

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..9

செங்கோட்டை நகராட்சி பகுதியில் குடிநீர் இணைப்பு இல்லாத குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டுமான வளர்ச்சி கழகம் லிமிடெட், சென்னை (TUFIDCO) வாயிலாக வட்டியில்லா கடன் மூலம் குடிநீர் இணைப்பு வழங்க,  நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.13277/2018/WS1, நாள்.. 03.07.2018ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர், சென்னை அவர்களது செயல் முறை ஆணை எண். 13277/2018/DO2, நாள்.. 26.12.2018ன் கீழ் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 18.01.2019 அன்று ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, நகர்மன்ற தீர்மானம் எண். 109 நாள்.. 22.01.2019ல் ஒப்புதல் பெறப்பட்டு, 31.01.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு தற்போது குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு இல்லாத கட்டிடங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு கீழ்க்கண்ட விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்யவும்

| | சிமிண்ட் சாலையில் உள்ள கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க | குடியிருப்பு கட்டிடங்கள் | குடியிருப்பு இல்லாத கட்டிடங்கள் |
|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை | ரூ. 5000/- | ரூ. 10000/- |
| 2 | மதிப்பீட்டு கட்டணம் | ரூ. 3645/- | ரூ. 3645/- |
| 3 | சாலை பராமரிப்பு கட்டணம் | ரூ. 4235/- | ரூ. 4235/- |
| 4 | மேற்பார்வை கட்டணம் | ரூ. 750/- | ரூ. 750/- |
| | மொத்தம் | ரூ. 13,630/- | ரூ. 18,630/- |

| | தார் சாலையில் உள்ள கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க | குடியிருப்பு கட்டிடங்கள் | குடியிருப்பு இல்லாத கட்டிடங்கள் |
|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை | ரூ. 5000/- | ரூ. 10000/- |
| 2 | மதிப்பீட்டு கட்டணம் | ரூ. 3576/- | ரூ. 3576/- |
| 3 | சாலை பராமரிப்பு கட்டணம் | ரூ. 3666/- | ரூ. 3666/- |
| 4 | மேற்பார்வை கட்டணம் | ரூ. 750/- | ரூ. 750/- |
| | மொத்தம் | ரூ. 12992/- | ரூ. 17,992/- |

மேற்கண்ட கட்டணங்களை 10 சமதவணைகளாக பிரித்து 6 மாதங்களுக்கு ஒருமுறை சொத்துவரியுடன் வசூல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மேற்கண்ட கட்டணத்தை நிர்ணயம் செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 168

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..10

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 29.05.2019 அன்று பொழிந்த மழை பொழிவினால் ஏற்பட்ட மின்னல் இடியின் காரணத்தினால் பழுதடைந்த 26 குழல் விளக்குகள் மற்றும் 6 சோடியம் ஆவி விளக்குகள் பழுது நீக்கம் செய்ய அனுமதி அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல்

| வ. எண் | பணியின் விவரம் | ஸ்டார் எலக்ட்ரிகல்ஸ், தென்காசி | இப்ராஹிம் எலக்ட்ரிகலஸ, தென்காசி | ராம் எண்டர்பிரைசஸ், நாகர்கோவில் |
|---|---|---|---|---|
| 1 | 150வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு சோக் (ஒன்றுக்கு) | ரூ.1860/- | ரூ.1850/- | ரூ.1760/- |
| 2 | 150 வாட்ஸ் சோடியம் ஆவி பல்பு(ஒன்றுக்கு) | ரூ.410/- | ரூ.410/- | ரூ.350/- |
| 3 | 150 வாட்ஸ் இக்னிட்டர் (ஒன்றுக்கு) | ரூ 295/- | ரூ 295/- | ரூ 210/- |
| 4 | சோடியம் கண்டன்சர் (ஒன்றுக்கு) | ரூ. 420/- | ரூ. 410/- | ரூ. 280/- |
| 5 | 40 வாட்ஸ் சோக் (ஒன்றுக்கு) | ரூ.195/- | ரூ.192/- | ரூ.170/- |
| 6 | 40 வாட்ஸ் டியூப் லைட் (ஒன்றுக்கு) | ரூ.42/- | ரூ.41/- | ரூ.40/- |
| 7 | 40 வாட்ஸ் ஸ்டார்ட்டர் (ஒன்றுக்கு) | ரூ. 12/- | ரூ. 10/- | ரூ. 10/- |
| 8 | 40 வாட்ஸ் ஹோல்டர் (ஒன்றுக்கு) | ரூ. 10/- | ரூ. 9/- | ரூ. 9/- |

மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைவிகிதம் வழங்கியுள்ள ராம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம எண் 169**

**அனுமதி வழங்கப்பட்டது.**

மன்றப்பொருள்..11

**செங்கோட்டை நகராட்சி அலுவலக ஜீப் வாகனம் எண். TN 76 AA 1237 தற்போது நல்ல நிலையில் அலுவலக பயன்பாட்டில் இருந்து வருகிறது. அலுவலக பணி தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பிற அலுவலகத்திற்கும், உயர்நீதி மன்ற மதுரை கிளை போன்ற இடங்களுக்கும் அடிக்கடி அலுவலக பணி தொடர்பாக சென்று வரப்படுகிறது என்பதால், நிர்வாக நலன் கருதி இந்த வாகனத்திற்கு குளிர் சாதனம் வசதி மேற்கொண்ட்டிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50000/-ஐ நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலககுறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எ.ண 170**

**அனுமதி வழங்கப்பட்டது.**